# பத்திரிக்கை செய்தி

## அணுகு சாலை சான்றிதழ் வழங்க ரூ.30,000/- லஞ்சம் கேட்டு பெற்ற வட்டார வளர்ச்சி அலுவலர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் முதல் நிலை உதவியாளர் ஆகியோர்கள் கைது

புகார்தாரர் திரு.உவைஷ் ரஹ்மான் கான், கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர், சின்ன எலசகிரி, காமராஜ் நகரை சேர்ந்தவர். புகார்தாரர் தனது தந்தை பெயரில் அணுகு சாலை சான்றிதழ் வாங்குவதற்காக வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். விண்ணபத்தினை பரிசீலனை செய்து கோப்புகளை தயாரிப்பதற்காகவும் சான்றிதழ் வழங்குவதற்காகவும் திரு.புட்டனய்யா, முதல் நிலை உதவியாளர், தள்ளி ப்ளாக், வட்டார வளர்ச்சி அலுவலகம், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் தனக்கு லஞ்சமாக ரூ.30,000/- கொடுக்க வேண்டும் என்று கூறியுள்ளார். அதில் ரூ.10,000/-ம் தனக்கும், ரூ.12,000/-யை திரு.நாகரத்தினம், வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களுக்கும் மீதமுள்ள ரூ.8,000/-யை திரு.முரளி, துணை வட்டார வளர்ச்சி அலுவலருக்கும் கொடுக்க உள்ளதாக கூறியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் திரு.உவைஷ் ரஹ்மான் கான் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை கிருஷ்ணகிரி பிரிவில் புகார் மனு ஒன்று அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 23.06.2023 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது திரு.புட்டனய்யா, முதல் நிலை உதவியாளர் அவர்களிடம் லஞ்ச பணமான ரூ.30,000/-யை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் மூவரும் கைது செய்யப்பட்டனர்.

**PRESS NOTE**

**BLOCK DEVELOPMENT OFFICER, DEPUTY BLOCK DEVELOPMENT OFFICER AND GRADE I ASSISTANT WERE ARRESTED FOR DEMAND AND OBTAINMENT OF BRIBE RS.30,000/- FOR ISSUING APPROACH ROAD AVAILABILITY CERTIFICATE**

The complainant Tr.Uvaish Rahman Khan, residing at Kamaraj Nagar, Chinna Elasagiri, Hosur, Krishnagiri District. Complainant had applied for road availability Certificate in the name of Complainant's father. Tr.Puttaniah, Grade I Assistant, office of the Block Development Officer, Thalli Block, Krishnagiri district demanded Rs.30,000/- as bribe for preparing and processing the file. Tr.Puttaniah, Grade I Assistant demanded Rs.10,000/- for himself, Rs.12,000/- for Tr.Nagarathinam, Block Development Officer and remaining Rs.8,000/- for Tr.Murali, Deputy Block Development Officer. Not willing to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Krishnagiri detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized today (23.06.2023). When the complainant met Tr.Puttaniah, Grade I Assistant at his office, Tr.Puttaniah reiterated and received the bribe amount of Rs.30,000/- from the complainant. All three accused were arrested.